ஆண்டு சந்தா ரூ. 60/–



# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 5 இதழ் : 9 ஜுலை 2009

## உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்கு கொடுத்தேன். யோசுவா 1:3

பீல் மக்கள் மத்தியில் 18 ஆண்டுகள்
ஊழியங்களை நிறைவேற்ற கிருபை செய்த
திரியேக தேவனுக்கு மகிமை உண்டாவதாக....



ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்



சுதேச ஊழியர் சாட்சி

# சகோ. ஜாம்சிங் டாமோர்

மத்தியப்பிரதேசம்

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் **ஜாம்சிங் டாமோர்** நான் மத்தியப்பிரதேச மாநிலத்திலுள்ள ஜாபுவா மாவட்டத்தைச் சேர்ந்த அந்தர்வேலியா கிராமத்திலுள்ள பீல் ஆதிவாசி. நானும் எங்கள் கிராம மக்களும் இயேசு என்ற பெயரைக் கூட கேள்விப்பட்டது கிடையாது. சாராயம் குடிப்பதிலும், கொள்ளையடிப்பதிலும், சண்டைபோடுவதிலும் தேறினவர்கள். நானும் இவ்வாறு பல பாவங்களுக்கு அடிமைப்பட்டிருந்தேன். எனது இருதயத்தில் வலி இருந்து வந்தது. இந்த இருதய வலி நீங்க நான் அநேக மந்திரவாதிகளிடம் சென்று ரூ. 2,000/—க்கும் அதிகமாக செலவு செய்து மந்திரக் கிரியைகள் செய்தும் பலனில்லை. இந்த சூழ்நிலையில் என்னுடைய சகோதரன் மிசேல், இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், ஷாலோம் ஊழியங்களைப் பற்றியும் கூறி, அந்தர்வேலியா கிராமத்திலுள்ள ஆலயத்தைப் பற்றியும் அங்கு நடைபெறும் அற்புதங்களைப் பற்றியும் எனக்கு தெரிவித்தான். இதனால் நான் அவனோடு இணைந்து ஆலயத்திற்குச் சென்றேன்.

சுதேச ஊழியர் இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தால் நிச்சயமாக இருதய வலி நீங்கும் எனக்கூறி என்னை உற்சாகப்படுத்தி எனக்காக பாரத்தோடு ஜெபித்தார். உடனடியாக எனக்கு இருயத்தில் இருந்த வியாதியின் பாரம் என்னை விட்டு நீங்கியது. இயேசு கிறிஸ்து என்னை முற்றிலும் சுகமாக்கினார். அந்த நாளிலேயே இயேசுவை ஏற்றுக் கொண்டு ஆலயத்திற்கு தவறாமல் சென்று வர ஆரம்பித்தேன். மேலும் ஒழுங்காக வேதத்தை வாசித்து இன்னும் அதிகமாய் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தேன்.

இப்பொழுது என்னை முற்றிலும் முழுநேர ஊழியனாக அர்ப்பணித்து, என் சொந்த ஜனம் இரட்சிக்கப்பட ஊழியம் செய்து வருகின்றேன். எனக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குவோர் : **Pudukottai Prayer Fellowship,** Pudukottai..

# உங்கள் சகோதரனிடமிருந்து....



கிறிஸ்துவுக்குள் மிக அன்பான, ஜெபித்துத் தாங்கும் உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

உங்கள் யாவரையும் இம்மாத மலர் மூலமாக சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கடந்த 6 மாதங்கள் தேவன் நம்மை ஊழியப் பாதையில் வழிநடத்தி பாதுகாத்து ஆசீர்வதித்து வந்தார். இந்த ஜுலை மாதத்திலும் தேவன் பெரியகாரியங்களைச் செய்வார். **"நான் உன்னோடே கூட இருந்து உன்னை ஆசீர்வதிப்பேன்"** என ஆதி. 26:3–ல் ஈசாக்கிடம் வாக்குரைத்த தேவன் நம் அனைவரையும் அப்படியே நடத்துவராக!

**ஊழியப் பாதையில் 18 ஆண்டுகள்**

ஒவ்வொரு வருடமும் ஜுலை மாதம் எங்கள் வாழ்வில் மறக்க முடியாத மாதமாகும். 01.07.1991 அன்று ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட நன்னாள். அது அற்பமான ஆரம்பமாக இருந்தாலும் தேவன் இன்று பீல் மக்களுக்கு சுவிஷேசம் அறிவிக்கவும், அவருடைய ராஜ்ஜியத்தைக் கட்டவும் எங்களை தெரிந்தெடுத்து பரமதரிசனத்தைத் தந்து வழி நடத்தி வருவதை நினைக்கும்போது அது அவருடைய அநாதி தீர்மானம் எனக்கூறி அவரைத் துதிக்கிறோம். 18 வருடங்கள் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் அற்புத அடையாளங்களுடன் ஆயிரம் ஆயிரம் ஆத்துமாக்களையும், அநேக சுதேச ஊழியர்களையும், அநேக சபைகளையும் எழுப்பி, அநேக திட்டங்களை நிறைவேற்றி ஆவியானவரின் அபிஷேகத்துடன் ஷாலோம் ஊழியங்களை தேவன் நடத்தி வருகிறார். எல்லா தேவைகளையும் சந்தித்து, சத்துருவின் போராட்டங்களுக்கு விலக்கி பாதுகாத்து பராமரித்து வந்தார். எங்களையும் தேவன் தந்த இந்த ஊழியத்தையும் நேசிக்கும்படி தேவன் தந்த பரிசுத்தவான்கள், சுவிஷேசகர்கள், போதகர்கள், தொழில் செய்வோர், வேலை செய்வோர், பிரதிநிதிகள், போர்டு மெம்பர்களுக்காவும், மேலும் பல தரப்பி–ருந்து தேவன் தந்த ஊழியத்தை ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். மேலும் ஊழியப் பாதையில் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திலும், குஜராத் பணித்தள அலுவலகத்திலும், பயிற்சி பிரிவுகளிலும், முன்னேற்ற திட்டங்களிலும் கரங்கொடுத்து வரும் உடன் ஊழியர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக அழைத்து நடத்திவரும் திரியேக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம். 01.07.2009 அன்று அனைவரும் குடும்பமாக, குழுவாக மற்றும் சபையாக ஷாலோம் ஊழியங்களுக்காக தேவனைத் துதிக்க அன்பாய் கேட்கிறேன்.

இந்த ஜூலை மாதத்தில் சுதேச ஊழியர்கள் குடும்பமாகவும், மூப்பர்களும் இணைந்து ஒவ்வொரு பகுதியாக கூடி திட்டமிட்டு 20ம் ஆண்டு நிறைவு விழா திட்டங்களை செயல்படுத்த இருக்கிறோம். 20 ஆண்டு ஊழிய நிறைவு திட்டமாக 1000 சுதேச ஊழியர்களை எழுப்பி, 1000 கிராம சபைகளை ஸ்தாபித்து தேவ ராஜ்ஜியத்தை விரைந்து கட்ட அர்ப்பணித்துள்ளோம். நீங்களும் இந்தத் திட்டங்கள் நிறைவேறவும், 1000 சுதேச ஊழியர்களையும் மாதம் ரூ. 1500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக்கூடிய 1000 ஆதரவாளர்கள் எழும்பவும், 1000 கிராம சபைகளையும் மாதம் ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக்கூடிய 1000 ஆதரவாளர்கள் கிடைக்கவும் ஜெபியுங்கள். மேலும் ஆதிவாசி மாணவர் கல்வித் திட்டங்களையும் தேவன் நிறைவேற்ற ஜெபியுங்கள்.

**இல்லற வாழ்வில் ஆசீர்வாதம்**

தேவ கிருபையால் 08.07.2009 அன்று நாங்கள் இல்லற வாழ்வில் 24 ஆண்டுகளைக் கடந்து வந்து, 25 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். திருமணமான 40 வது நாளில் தேவன் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய எங்களை IMS ஸ்தாபனத்தின் மூலமாக அனுப்பினார். 24 வருடங்கள் குடும்பமாக பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக வழி நடத்தினார். தேவன் தந்த பிள்ளைகள் டைட்டஸ், ஷாலோம், ஷெக்கினா– ஆகியோருக்காக தேவனைத் துதிக்கிறோம். எங்கள் குடும்ப வாழ்விலும் கூட தேவன் எல்லாவித நன்மைகளையும் தந்து குறைவில்லாமல் நடத்தினார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! வரும் காலங்களில் நானும் என் வீட்டாருமாக கர்த்தரையே சேவிப்போம் என்று அர்ப்பணித்துள்ளோம். 08.07.2009 அன்று எங்கள் குடும்பத்திற்காக ஜெபித்து எங்களை ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறேன்.

**கடந்த மாத ஊழியங்கள்**

20.05.2009 அன்று டெல்–, ராம்ஜியில் ஜூன் 10 முதல் 12 வரை மூன்று நாட்கள் நடைபெற்ற கருணா பாலவிகாஸ் திட்டத்தின் கூட்டத்தில் பங்குபெற தேவன் கிருபை செய்தார். 06.06.2009 அன்று பாண்டிச்சேரியில் நடைபெற்ற இயேசு அழைக்கிறார் சுகமளிக்கும் ஆராதனையில் செய்தி கொடுக்க தேவன் கிருபை செய்தார். அநேகரை தேவன் விடுவித்து, சுகமாக்கி, அபிஷேகித்து நிரப்பினார் 08.06.2009 அன்று மூத்த சுதேச ஊழியர் மனைவிமார் சுமார் 100 பேர் கூடி தாகோத் பயிற்சிக் கூடத்தில் ஊழிய வளர்ச்சிக்காக உபவாசித்து ஜெபித்தார்கள். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் சிறப்புச் செய்தி கொடுத்தார்கள். பரிசுத்த ஆவியானவர் அளவில்லாமல் ஊற்றப்பட்டார். தேவனுடைய வல்லமைகள் வெளிப்பட்டன. 09.06.2009 அன்று குஜராத் ஊழியர் கூடுகை, 11.06.2009 அன்று மத்தியப்பிரதேச ஊழியர் கூடுகை, 13.06.2009 அன்று பரோடாவில் நடைபெற்ற Tamil Christian Fellowsihp –ல் அலுவலர்கள் குழுவாக சென்று ஊழியம் செய்யவும், தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து

கொள்ளவும் தேவன் கிருபை தந்தார். வந்த அனைவரையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். Mr. Glaston அவர்கள் தனது வீட்டில் நேர்த்தியாக இந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள், அவருக்காக தேவனைத் துதிக்கிறோம். 20.06.2009 அன்று இராஜஸ்தான் ஊழியர் கூடுகை – I Area, 25.06.2009 அன்று இராஜஸ்தான் ஊழியர் கூடுகை – II Area, சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார்.

**ஆதிவாசி மாணவர் மேம்பாட்டுத் திட்டம்**

தேவனுடைய கிருபையால் மே மாதம் முழுவதும் 500க்கும் அதிகமான கிராமங்களில் பயிற்சி பெற்ற CBC (Children Bible Class) தேவ பிள்ளைகள் மூலமாய் 20,000–க்கும் அதிகமான சிறுவர்கள் தேவனண்டை வழி நடத்தப்பட்டார்கள். இதற்காக ஜெபித்து, தாங்கிய உங்கள் யாவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ந்து நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் 900 பேரை நம்முடைய ஷாலோம் விடுதியில் தங்க வைத்து கல்வி உதவி வழங்கி வருகிறோம். இவ்வருடம் இந்த 900 சிறு பிள்ளைகளின் கல்வித் தேவையான ரூ. 4,75,000/– கிடைக்கப்பெற ஜெபியுங்கள். உண்டியல் மூலம் காணிக்கை செலுத்தும் பிள்ளைகள், பெரியவர்கள், தலைமை அலுவலகத்திற்கு காணிக்கைகளை அனுப்ப அன்பாய்க் கேட்கிறேன். இந்த மடலை வாசிக்கும் ஒவ்வொருவரும் ஒரு சிறிய பங்கை அனுப்பி ஆதிவாசி மாணவர் கல்வித் திட்டத்தை ஆசீர்வதிக்க அன்பாய் கேட்கிறேன்.

இம் மாதங்களில் குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வசிக்கும் நமது பீல் ஆதிவாசி ஜனங்கள் மழையையே நம்பி வாழ்கிறார்கள். ஆகையால் ஏற்ற காலத்தில் தேவன் நல்ல மழையை தந்து ஆசீர்வதிக்க கருத்தாய் ஜெபியுங்கள். மேலும் தாகோத் பணித்தள அலுவலகம், தூத்துக்குடி தலைமை அலுவலகம், முன்னேற்றப் பணிகள் மற்றும் ஒவ்வொரு ஊழியப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்கள் உண்மையாக பணியாற்றவும், தேவனுக்காக பிரகாசிக்கவும் ஜெபியுங்கள். உடன் ஊழியர்களின் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.


**"நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்.**

(யோசுவா 1:9)

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

வே. தேவதாஸ்

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**



# காலடி மிதிக்கும் எவ்விடத்தையும்......

சிறப்புச் செய்தி : **சகோ. V. தேவதாஸ்**

**"நான் மோசேக்கு சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்". (யோசுவா 1 : 3)**

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!

தேவகிருபையால் அவருடைய அநாதி தீர்மானத்தின்படியே 18 வருடங்கள் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் பணிகளை நிறைவேற்ற கிருபை தந்துள்ளார். அடுத்து வரும் 19, 20–ம் ஆண்டு நிறைவுக்குள் தேவனுக்காக பெரிய காரியங்களை செய்வதற்கு, அவர் சித்தத்தை நிறைவேற்ற காத்திருக்கும் போது தேவன் யோசுவா முதல் அதிகாரத்தை தியானிக்கும்படியாக கொடுத்தார். நம் ஊழியங்களுக்கு மட்டுமல்ல இந்த தரிசனப்பணியில் இணைந்து செயல்படும் நம் அனைவருக்கும் தேவன் இந்த வார்த்தைகளை தருகிறார்.

முதலாவதாக யோசுவாவின் ஊழியம், மோசேயின் ஊழியத்தினின்று சற்று வேறுபட்டது. மோசேயின் ஊழியம், தேவ ஜனங்களை விடுவித்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு நேராக வழிநடத்தியது. யோசுவாவின் ஊழியம் தேசத்தை சுதந்தரித்து கொள்வது. மோசேயின் ஊழியத்தைப்போல் இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து தம் இரத்தத்தை சிந்தி மீட்பின் பணியை சிலுவையில் முடித்துவிட்டார். அவருடைய சீஷர்கள், அவர்களை தொடர்ந்து வரும் தேவ ஜனங்கள் தேசத்தை சுவிசேஷத்தின் மூலமாக சுதந்தரிப்பது தான் தேவன் தந்த திட்டமும் ஊழியமுமாகும். ஆம் நாம் யோசுவாவின் சந்ததியாக வாழ்கிறோம். ஆகவே யோசுவாவுக்கு கொடுத்த வாக்குத்தத்தங்களையும், ஆலோசனைகளையும், கட்டளைகளையும் நாம் தியானிப்போம். நாமும் அப்படியே நிறைவேற்றும் போது தேசத்தை தேவனுக்காக சுதந்தரிப்போம்.

முதலாவதாக தேவன் நீயும், ஜனங்களும் ***எழுந்து*** யோர்தானை ***கடந்து*****.....** நான் கொடுக்கும் தேசத்திற்கு ***போங்கள்.*** நாம் இருக்கும் நிலைமையில் இருக்க தேவன் விரும்பவில்லை. ஐயோ! மோசே நம் தலைவர் இறந்துவிட்டாரே இனி என்ன ஆகும்

என கலங்க வேண்டாம். முதலாவது இருக்கும் இடத்தை விட்டு தூசியை உதறி தள்ளிவிட்டு எழும்பவேண்டும். நீ பிரகாசிக்கப்பட வேண்டும் என தேவன் விரும்புகிறார். மேலும் தடையாக காணப்படும் யோர்தானை நீ கடக்க வேண்டும். எழும்பினால் தான் நீ அதை கடந்து செல்ல முடியும். யோர்தானின் வெள்ளத்தைக் கண்டு மனம் உடைந்து போகாதே. ஊழியப்பாதையிலும், வாழ்க்கைப்பாதையிலும் புரண்டோடும் பிரச்சனைகளைக் கண்டு அப்படியே அமர்ந்துவிடாதே **"எழுந்து... கடந்து... போ..."** சுதந்தரித்துக் கொள், ஏனென்றால் தேசத்தை தேவன் வாக்குத்தத்தமாகத் தந்துள்ளார். மோசேக்கு சொன்னபடி, ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணினபடி யெகோவா எல்ஷடாய் கர்த்தர் நமக்கு தந்தருள்வார். 24 வருடங்களுக்கு முன்பு பீல் மக்களை தரிசனத்தில் தேவன் காட்டி இந்த ஒரு ஜாதி மக்களை உங்களுக்குத் தருவேன் என்று வாக்கு கொடுத்தார், கட்டாயமாகத் தருவார். 18 வருடங்கள் நடத்திச் சென்ற தேவன் 20 வருடங்களுக்கான பெரிய காரியங்களைச் செய்வார், அல்லேலுயா!

இரண்டாவதாக **"பலங்கொண்டு திட மனதாயிரு"** இந்த வாக்குத்தத்தத்தை கவனித்துப் பாருங்கள் இந்த அதிகாரத்தில் நான்கு முறை முறுபடியும் மறுபடியும் வருகிறது. தேவன் நம்மை பலப்படுத்துகிறார். ஒருவேளை நம்முடைய பலன் குறைவுள்ளது. மோசே எப்படி இந்த ஜனங்களை போஷித்து, பராமரித்து, பாதுகாத்து இந்த வனாந்திரப் பாதையில் நடத்துவது என்று கலங்கியிருக்கலாம். 40 ஆண்டுகள் வனாந்திரப் பாதையில் தேவனுடைய பலத்த கரமும், ஓங்கிய புயமும் நடத்தியதல்லவா? எனக்கன்பானவர்களே! கர்த்தர் செய்த அதிசயங்களை நினைவுகூறும்போது நாம் பெலனடைகிறோம். மட்டுமல்லாமல் பரிசுத்த ஆவியானவர் நம்மை பெலப்படுத்துகிற தேவனாகவும் இருக்கிறார். நீ உயிரோடு இருக்கும் நாளெல்லாம் ஒருவரும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை, என்றும் கூறியுள்ளார். மந்திரவாதங்கள், பில்–சூனியங்கள், எதிர்ப்புகள், பயங்கள் நிறைந்த இந்த பீல் மக்கள் மத்தியில் 24 வருடங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்று அநேகர் எங்களிடத்தில் கேட்பதுண்டு. தேவன்தாமே இந்த வாழ்க்கையை தந்துள்ளார். ஒன்றும் உங்களை சேதப்படுத்தாது என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளாரே! பிரியமானவர்களே நாம் வாக்குத்தத்தத்தைப் பிடித்துக் கொள்வோம். ஊழியத்திலும், வாழ்க்கையிலும் வெற்றியாகக் கடந்து செல்வோம்.

மூன்றாவதாக தேவன் தரும் ஆலோசனை **"என் தாசனாகிய மோசே உனக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின்படியெல்லாம் செய்யக் கவனமாயிருக்கமாத்திரம்**

**மிகவும் பலங்கொண்டு திடமனதாயிரு; நீ போகும் இடமெல்லாம் புத்திமானாய் நடந்து கொள்ளும்படிக்கு, அதை விட்டு வலது இடதுபுறம் விலகாதிருப்பாயாக".**

**"இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்."** (யோசுவா 1:7&8) தேவனுடைய நியாயப்பிரமாண புஸ்தகத்தை தியானிக்க வேண்டும். அவைகளின்படி செய்ய வேண்டும். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போ–ருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்கீதம் 1 : 3) இவ்வசனத்தின்படி செய்யும்போது நாம் செய்வதை எல்லாம் வாய்க்கப்பண்ணுவார். நாம் வேதத்தை மறந்தால் அவர் நம்மையும், பிள்ளைகளையும் மறந்துவிடுவார்.

இன்று நம் சுதேச ஊழியர்கள் ஆசீர்வதிக்கப்படுவதின் காரணம் என்ன தெரியுமா? வேதத்தை அதிகம் நேசிப்பதால்தான். சுதேச ஊழியர்களின் மனைவிமார்களில் 95% படிக்க தெரியாதவர்கள். பள்ளிக்கூடமே போகாதவர்கள். ஆனால் அநேக சுதேச ஊழியர் மனைவிமார்கள் என் மனைவி வஹிதா உதவியுடன் ஆலோசனை பெற்று முதியோர் கல்வித் திட்டத்தின்படி படிக்க ஆரம்பித்தார்கள். மேலும் பரிசுத்த ஆவியினால் நிறைந்து ஜெபித்தார்கள். இன்று பல அதிகாரங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பார்கள். சங்கீதம் 119 முழு அதிகாரத்தையே மனப்பாடம் செய்து ஒப்புவிப்பார்கள். ஆகவே தான் இன்று தேவன் புதிய ஆசீர்வாதங்களை தந்து கொண்டு இருக்கிறார். வேதத்தை வாசிப்பது மட்டுமல்ல அதற்கு கீழ்ப்படியும் போது **"நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்"** என்றார். (யோசுவா 1 : 9) மேலும் நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்வாய் என்ற வாக்கு நிறைவேறும்.

நான்காவதாக கடைசியாக யோசுவா ஜனங்களுக்கு தரும் ஆலோசனை

அவர்களுக்கு உதவி செய்யக்கடவீர்கள். **"கர்த்தர் உங்களைப்போல உங்கள் சகோதரரையும் இளைப்பாரப்பண்ணி, அவர்களும் உங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கும் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுமட்டும், அவர்களுக்கு உதவிசெய்யக்கடவீர்கள்."** (யோசுவா 1 : 15) யோசுவா : ரூபனியரையும்,

காத்தியரையும், மனோசேயின் பாதிக் கோத்திரத்தாரையும் பார்த்து இந்த வார்த்தையைக் கூறுகிறார். உங்களுக்கு தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள தேவன் உதவிச் செய்தார். அதே நேரத்தில் உங்களைப் போல உங்கள் சகோதரர்களையும் நினைத்து உதவிச் செய்யுங்கள் என்று யோசுவா கூறுகிறார். எனக்கன்பானவர்களே! நம் இந்திய தேசத்திற்கு குறிப்பாக தமிழகத்திற்கு அநேக மிஷனெரிகள் வந்து இயேசுவின் அன்பைக் குறித்து நமக்கு அறிவித்தார்கள். அவர்கள் பெற்ற நன்மைகளை நமக்கு கொடுத்து உதவினார்கள். மட்டுமல்லாமல் பல பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள் கட்டிக் கொடுத்தார்கள். அவர்கள் உதவிச் செய்ததின் நிமித்தமாக இன்றைக்கு நாம் பல நன்மைகளைப் பெற்று வருகிறோம். இதேபோலத்தான் நம் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள இன்றைக்கு பல மிஷனெரி ஊழியங்கள் மூலமாக நம் சகோதர சகோதரிகள் வட இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்றுள்ளார்கள். இவர்களுக்கு உதவிச் செய்வது நம்மேல் விழுந்த கடமை. ஊழியர்களுக்காக பாரத்துடன் ஜெபிக்கலாம். இன்னும் அதிகமாக ஊழியங்களுக்காக கொடுத்து உதவலாம்.

## நினைவு கூறுகிறோம்....



**01.07.2009** அன்று Dr. DGS தினகரன் ஐயா அவர்கள் பிறந்தநாளில் அவர்களை நினைவு கூறுகிறோம். இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் ஐயா அவர்கள் செய்த வல்லமையான ஊழியங்களையும், மகிமையான காரியங்களையும், பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு ஆவிக்குரிய தகப்பனாக வாழ்ந்ததையும் நினைத்து தேனுக்கு மகிமையை செலத்துகிறோம். மேலும் அவர் ஷாலோம் ஊழியங்களுக்கும், எங்களுக்கும் செய்த உதவிகளுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

இந்த நாளில் இயேசு அழைக்கிறார் சீஸா காருண்யா, பெதஸ்தா ஊழியங்களுக்காகவும், ஸ்டெல்லா அம்மாவிற்காகவும் மற்றும் Dr. பால் தினகரன், அவர்கள் குடும்பத்திற்காகவும் விஷேசமாக ஜெபிக்கிறோம்.

- உங்கள் விலாசத்தில் மாறுதல்கள், திருத்தங்கள் இருக்குமென்றால் சரி செய்து ***பழைய, புதிய முகவரிகளை*** தெரியப்படுத்துங்கள். ஏனெனில் நாங்கள் அனுப்புகின்ற பத்திரிக்கைகள் பல எங்களுக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றன. உங்களுக்கு ***ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிக்கைகள்*** வருகிறதென்றால் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

- உங்கள் பகுதியில் நம் மிஷனெரி ஊழியத்தின் பிரதிநிதிகள் இருப்பார்கள் என்றால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக்கொள்ளுங்கள். மேலும் தலைமை அலுவலகத்திற்கு உங்கள் நகல் இரசீதும், பணமும் கிடைத்த பின்பு தலைமை அலுவலகத்தி–ருந்து உங்களுக்கு நன்றிக் கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

- நம்முடைய அலுவலகப்பணிகள் அனைத்தும் Computer மயமாக்கப்பட்டுள்ளன. அனைத்து ஆதரவாளர்களுக்கும் குறியீட்டு எண் (Sponser ID No) கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும்போது தங்கள் குறியீட்டு எண்ணை (Sponser ID No) தவறாது எழுதுங்கள்.

- நீங்கள் அனுப்புகின்ற காணிக்கை, மணியார்டர், டிராப்ட், காசோலை மற்றும் கடிதங்களுக்கு அதிகபட்சமாக இரு வாரங்களுக்குள் இரசீதும், நன்றிக் கடிதமும் வரவில்லையென்றால், உடனடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்குத் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் தெரியப்படுத்த வேண்டுகிறோம். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க ஏதுவாயிருக்கும்.

- நீங்கள் M.O அனுப்பும் போது எங்களுக்குக் கிழித்துக் கொடுக்கும் பகுதியில் உங்கள் ***தெளிவான முகவரியையும், ஜெபக்குறிப்புகளையும்*** எழுதி அனுப்பினால் உங்களுக்காக பாரத்துடன் ஜெபிக்க மிகவும் ஏதுவாயிருக்கும்.

- எங்களோடு தொடர்பு கொள்ளும்போது உங்களுடைய பங்காளர் எண்ணைக் (Partner No.) குறிப்பிடவும்.

அறிமுகப்படுத்துகிறோம்...

# SHALOM CHARITY MISSION
# ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 18 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிஷேசம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.


அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டு திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக நீண்ட நாட்கள் ஜெபத்திற்குப் பின் மூத்த தலைவர்களின் ஆலோசனையின் பேரில், ஆவியானவரின் வழிநடத்துத–ன்படி **Shalom Charity Mission –** என்ற இயக்கத்தை பதிவு செய்ய தேவன் கிருபை தந்துள்ளார். **Sharing Love Mission** சுவிஷேசப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும், **Shalom Charity Mission –** மற்ற சமூதாய முன்னேற்ற பணிகளை கருத்தாக திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். **Shalom Charity Mission - Founder & Managing Trustee** ஆக **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். Dr. Mr. Prema Christopher, (Palayamkottai), Mr. Winston Balasingh (Tuticorin), Mr. Jacob (Chennai) ஆகிய மூவரும் **Trustee** களாக பொறுப்பேற்றுள்ளார்கள். Sharing Love Mission Board முழுமையாக இதை ஆதரித்து, செயல்பட அனுமதித்துள்ளது. ஆகவே இந்த மாதம் முதல் (01.07.2009) Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது Shalom Charity Mission – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறேன். விரைவில் நமக்கு இந்த சமூக சேவை பணிக்கான 80G கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். மேலும் பிரதிநிதிகளுக்கு ரசீது புத்தகங்கள் அனுப்பப்படுகிறது.

மேலும் இது குறித்து விபரங்களை அறிய எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். சகோதரி வஹிதா தேவதாஸ், Cell : 09327445468, சகோ. சாம் குணசீலன் Cell : 9345675468

## பணித்தளத்திலிருந்து

# ஒரு ஜெப விண்ணப்பம்...



எனது பெயர் **மங்கு புரியா** நான் குஜராத்திலுள்ள பட்டன்பூரா கிராமத்தில் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறேன். எனது சித்தப்பா மகன் **பூராபாய்** (விசுவாசி அல்லாதவர்) பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு தேர்த—ல் நின்றார். அந்த சமயத்தில் நமது சபைக்கு வந்து விசுவாசிகளிடத்தில் எனக்கு ஓட்டுப் போடுங்கள், நான் ஜெயித்துவிட்டால் உங்களுக்கு அநேக உதவிகளைச் செய்வேன். ஒரு ஸ்தோத்திரக்கூட்டம் வைத்து, அந்தக் கூட்டத்தில் உங்கள் அனைவருக்கும் சாப்பாடு போட்டு சபைக்கு 1001 ரூபாய் காணிக்கை கொடுப்பேன் என வாக்கு செய்தார். அப்படியே தேர்த—ல் வெற்றி பெற்று பஞ்சாயத்துத் தலைவராகிவிட்டார். ஆனால் அவர் சொன்ன எதையும் செய்யவில்லை. மாறாக சுவிசேஷத்திற்கு எதிராக செயல்படும் அரசியல் தலைவர்களுடன் சேர்ந்து, ஓராண்டிற்குப் பின் நமது விசுவாசிகளுக்கு விரோதமாக செயல்பட ஆரம்பித்தார். அந்த எதிராளிகள் இயேசு வெளிநாட்டுத் தெய்வம், அவர் நமது தெய்வமல்ல, இங்கு கிறிஸ்தவர்கள் உருவாகக்கூடாது என்று கூறி பஞ்சாயத்துத் தலைவராகிய பூராபாயைத் தூண்டியபடியால் அவர் நமது விசுவாசிகளின் வீட்டிற்குச் சென்று, இயேசு கிறிஸ்துவை விட்டு விடுங்கள் இல்லையென்றால் கிராமத்தைவிட்டு உங்களையும், ஊழியரையும் துரத்திவிடுவோம் எனக்கூறி வீடுகளி—ருந்து வேதாகமங்களை எடுத்து மண்ணில் போட்டு மிதித்தார். ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நானும் விசுவாசிகளும் **தந்தை பெர்க்மான்ஸ்** அவர்கள் மூலம் வானியாவா கிராமத்தில் நடத்தப்பட்ட கூட்டத்திற்குச் சென்று திரும்பியபோது அந்த எதிராளிகள் எங்களை இடைமறித்து எங்களிடமிருந்த 20 வேதாகமங்களைப் பறித்து சாராயத்தை வேதாகமங்களின் மீது ஊற்றி அதன் மீது ஏறி நடனமாடினர்.

இந்த சூழ்நிலையில் அடுத்த தேர்தல் வந்தது. இந்தத் தேர்த—ல் **பூராபாய்** தோற்றுப்போய்விட்டார். ஆகவே நான் தோற்றதற்குக் காரணம் நீங்கள் தான் என்று நமது விசுவாசிகளின் வீடுகளுக்குச் சென்று அடிக்கடி சண்டை பிடித்து வந்தார்.

இந்நிலையில் இவர் T.B நோயினால் பாதிக்கப்பட்டார். நான் அவரை நகரத்திலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று மூன்று நாட்கள் அவருடன் தங்கி இருந்து கவனித்து அவருக்காக ஜெபித்து வந்தேன். ஆனால் அவருடைய சொந்தக் காரர்கள் அவருக்காக ஜெபிக்க தடைவிதித்து அவரை மருத்துவமனையி–ருந்து அழைத்து ஒரு இந்துக் கோவிலுக்குக் கூட்டிச் சென்றனர். ஆனால் மறுநாளே அவர் மரித்துவிட்டார். இதை சாதகமாக பயன்படுத்திய எதிராளிகள் மந்திரவாதியிடம் பணம் கொடுத்து இவன் ஜெபித்து விரட்டுகிற பேய்கள் எல்லாம் தான் உங்கள் வீட்டிற்கு வந்து அவரைக் கொன்றுவிட்டது, இவர் இறந்ததற்குக் காரணம் இவன்தான் என்று அவருடைய உறவினர்களிடம் கூறும்படி செய்தார்கள். அவருடைய குடும்பத்தார் அனைவரும் எனக்கு விரோதமாக எழும்பியது மட்டுமல்லாமல், நான் ஊழியம் செய்து வந்த மூன்று கிராமத்தாரும் எனக்கு விரோதமாக எழும்பி, என்னிடம் வந்து நீ ஜெபித்து எங்கள் கிராமத்திலுள்ள எங்கள் தெய்வங்களையெல்லாம் செயல்படவிடாமல் ஆக்கிவிட்டாய் என்று கூறி சண்டை போட்டனர். இந்த பிரச்சனைகள் நீங்கும்படி நான் தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். இந்த சூழ்நிலையில் பிறகு எங்கள் கிராமத்திலுள்ள அனைவரும் ஒன்று கூடி என்னை ராஜஸ்தானிலுள்ள ஒரு பெரிய மந்திரவாதியிடம் அழைத்துச் சென்றனர். நான் போகாவிட்டால் என்னை கிராமத்தில் இருக்க விடமாட்டோம் என மிரட்டி அழைத்துச் சென்றனர். நான் அதிகமாய் ஜெபித்துக் கொண்டே வந்தேன். விசுவாசிகளும் எனக்காய் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். மந்திரவாதியிடம் வந்து அவனை சோதிப்பதற்காக இறந்த பஞ்சாயத்துத் தலைவரின் மனைவியின் பெயர் என்ன என்று கேட்டபோது அவன் தவறாக கூறினான். மேலும் இரண்டு மூன்று கேள்விகள் கேட்டார்கள் அனைத்து கேள்விகளுக்கும் தவறாகவே பதில் கூறியதால் இந்த மந்திரவாதி சரியில்லை என்று கூறி என்னை திரும்பி அழைத்து வந்துவிட்டனர். பின்னர் கிராம மக்கள் அவரவர் வேலைகளை பார்க்கச் சென்றுவிட்டார்கள் ஆனால் ஆலயம் மூடப்பட்டுதான் இருக்கிறது. இறந்து போன பஞ்சாயத்துத் தலைவரின் உறவினர்கள் இன்னும் அவருடைய மரணத்திற்குக் காரணம் நீ தான் எனக்கூறி எனக்கு விரோதமாக செயல்பட்டு வருகிறார்கள். நானும் விசுவாசிகளும் அதிகமாய் ஜெபித்து வருகிறோம்.

எங்கள் கிராமத்திலுள்ள சபை திறக்கப்பட்டு ஆராதனை நடைபெறவும், அருகிலுள்ள கிராமத்தார் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும், விரோதங்களை தேவன் மாற்றவும் தொடர்ந்து எங்களுக்காக ஜெபியுங்கள்...

## பீல் மக்களுக்காக தேவன் தந்த

## ஆழ்குழாய் கிணறு அடி பம்பு திட்டம் (Hand Pump Project)



இது நமது ஷாலோம் ஊழியங்கள் சிறப்பாக நடைபெற்று வரும் குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நகரங்களை விட்டு மிகவும் உள்ளடங்கிய பகுதிகளில் வசிக்கும் பீல் ஆதிவாசி மக்களுக்காக தேவன் தந்த திட்டமாகும்.

இந்த பீல் ஆதிவாசி ஜனங்கள் வாழும் பகுதிகளில் தண்ணீர் கிடைப்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். அதுவும் கோடைகாலங்களில் இந்த ஜனங்கள் பல கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று மற்ற ஊர்கள் மற்றும் காட்டுப் பகுதிகளிலுள்ள ஆழமான சிறிய கிணறுகளிலும் குட்டைகளிலும் உள்ள சுகாதாரமற்ற நீரை எடுத்த வந்துதான் குடிப்பதற்கும் உணவு சமைப்பதற்கும் பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் பலர் நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

இதைப் பற்றி ஆவியானவர் நமக்குப் பாரம் கொடுக்கவே, CBN ஸ்தாபனத்தின் மூலமாக ஆண்டுதோறும் பீல் மக்கள் வாழும் கிராமங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து குடிநீருக்கு வழி செய்து வருகிறோம். அதேபோல இந்த ஆண்டும் ஆவியானவரின் ஏவுத—ன் படி CBN ஸ்தாபனத்தின் உதவியுடன் 26 கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு ஆழ்குழாய் கிணறு போட்டு அடிபம்பு அமைத்துக் கொடுத்தோம். நாம் அமைத்த 26 இடங்களிலும் எந்த வித தடைகளும் இல்லாமல் நல்ல தண்ணீர் வர தேவன் கிருபை செய்தார். இதன் மூலம் பீல் மக்கள் மிகவும் மகிழ்ச்சியுற்றனர். தேவனுடைய நாமத்தைத் துதித்தனர், இதன் மூலம் தேவ நாமம் மகிமைப்பட்டது. CBN ஸ்தாபனத்திற்காக தேவனைத் துதிக்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

## சிறப்பு நிதி ஆதரவாளர்கள் கவனத்திற்கு

நம் ஷாலோம் ஊழியத்தின் மூலமாக ஊழியர் மற்றும் விசுவாசிகளின் ஆதிவாசி பிள்ளைகள் 400 பேரைத் தாங்கி வருகிறோம். இவர்களின் சுமார் 73 பேருக்கு ஆதரவாளர்கள் கிடையாது. ஆனாலும் கூட மிகுந்த நெருக்கத்தின் மத்தியிலும் இவர்களை தாங்கி வருகிறோம். மட்டுமல்லாமல் இது தவிர நமது சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் சுமார் 500 பேர் தங்கள் வீட்டிலும், வேறு விடுதியிலும் கல்வி பயின்று வருகிறார்கள். இந்த ஜுன் மாதத்தில் பள்ளிக் கட்டணம் செலுத்தி படிக்க வைக்க வேண்டும் என்றும், இந்த ஊழியர்களின் பிள்ளைகளையும் நாம் ஜெபித்துத் தாங்க வேண்டும் என்றும் தீர்மானித்திருக்கிறோம். ஆகவே இந்தத் திட்டத்திற்காக ரூபாய். 4,75,000/– தேவைப்படுகிறது. இந்த தேவைகள் சந்திக்கப்பட ஜெபித்து ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் ஏவுகிற படி காணிக்கைகளை அனுப்பி உதவ மிக அன்பாய் கேட்கிறோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

# அற்புதமான ஆரம்பம் 01.07.1991 யார் அசட்டை பண்ண முடியும்

சகோ. V தேவதாஸ்



தாயின் கர்ப்பத்தில் உருவாகுமுன்பே தெரிந்தெடுக்கும் தேவன் கோவை பட்டிணத்தில் ஒரு கடையில் பணியாற்றிக்கொண்டிருக்கும்போது அன்பும், சமாதானமும் கிடைக்கப் பெறாமல் அலைந்த என்னை 14.10.79 அன்று கோவை அப்போஸ்தல ஜெபவீட்டில் நடந்த ஆராதனையில் இரட்சித்தார். 4.11.79 அன்று ஆராதனையில் தேவன் பெயர் சொல்லி அழைத்து ஒரு ஜாதி மக்களுக்கு ஆசீர்வாதமாக விளங்கப்பண்ணுவேன் என்று திருவுளம் பற்றினார். போதகர் ஜோயல் ஆனந்தராஜ் அவர்கள் ஆவிக்குரிய தகப்பனாக என்னை வழிநடத்த 7.11.81 அன்று FMPB ஊழியத்தில் மிஷனெரியாக ஒப்புக்கொடுத்து வட இந்திய மாநிலங்களில் 1985ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை பணியாற்றினேன். 8.7.1985 அன்று IMS–ல் பணியாற்றிய சகோதரி. வஹிதாவுடன் திருமணத்தால் இணைய தேவன் கிருபை தந்தார். திருமணமாகி நான்காவது நாளில் தேவன் வில், அம்புகளை வைத்திருக்கும் பீல் மக்களை தரிசனமாக தந்து இந்த மக்களைதான் உங்களுக்கு தருவேன் என வஹிதாவுக்கு தெளிவாக காட்டினார். தேவகிருபையால் IMS மூலமாக இந்த பீல் மக்கள் மத்தியில் 1985 ஜூலை முதல் 5 வருடங்கள் பணியாற்ற தேவன் கிருபை தந்தார்.

பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின்படி முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டப்படி நாங்கள் I.M.S. பணிகளிலிருந்து எங்களை விடுவித்தபோது அனைத்து சபைகள், ஊழியங்கள், ஆத்துமாக்கள் மற்றும் அனைத்து தளவாடங்கள், உடமைகள் முதலான ஒன்றையும் இச்சிக்காத வண்ணம் I.M.S.–ல் ஒப்புக்கொடுத்துவிட்டு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதன்படி அடுத்த தாலுகாவான ஜாலோத் சென்று ஊழியம் ஆரம்பிக்க திட்டமிட்டோம். அவ்வேளையில் என் மனைவிக்கு பிரசவகாலம் நெருங்கினபடியால் பிரசவகாலத்திற்குப் பின்பு முன் பணி செய்த ஊரைவிட்டு வெளியேற வாக்களித்தோம். அமர்சிங் என்ற 8–வது வரை படித்த ஒரே ஒரு பையனை வீட்டு வேலைக்கு உதவி செய்ய அனுமதியுடன் வைத்திருந்தோம்.

தேவனிடத்தில் நீண்ட நாட்களாக ஆசையுடன் ஜெபித்த பெண்குழந்தை

"ஷாரோனை" தேவன் தந்தார். மிகவும் அழகான குட்டிப்பாப்பா ஷாரோனைக் கண்டு என் பையன்கள் டைட்டஸ், ஷாலோம் அதிக மகிழ்ச்சியுற்றார்கள். சில தினங்களில் (24.06.1991) குழந்தை சுகவீனப்பட்டது. மருத்துவ வசதி இல்லை. பரோடாவுக்கு கொண்டு செல்ல மருத்துவர் கூறினார். கைகளில் பணமும் இல்லை. என்ன செய்யவதென்று தெரியாமல் தாகோத் ஊர் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருக்கும்போது "ஷாரோன்" எங்களை விட்டுப் பிரிந்துவிட்டதை அறிந்தோம். 100 வருடங்களுக்கு முன்பு I.P. Mission மூலம் வந்த மிஷனெரிகளின் கல்லறைக்கு அருகில் அவளை நல்லடக்கம் செய்தோம். டைட்டஸ், ஷாலோம் "ஷாரோன்" பாப்பா எங்கே? என வினவினார்கள். கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் அவருக்கே ஸ்தோத்திரம் என்று சொன்னோம். பிஞ்சு உள்ளங்களை தேவன் தேற்றினார். தமிழில் ஆறுதல் கூறயாருமே இல்லை. தேவனே எங்களை தேற்றினார்.



இந்நிலையில் வீடு கிடைக்கவில்லை. ஜலோத் நகரத்தில் இறுதியாக பேய்வீடு என்று அழைக்கப்பட்ட வீடு ரூ.625/– மாத வாடகையில் கிடைத்தது. ஆனால் அது பல வருடங்களாக ஆலயமாக இருந்தது. கிறிஸ்தவர்கள் இல்லாதபடியால் ரூ.2000–க்கு விற்கப்பட்டு, குடியிருப்பாக மாறினது. அங்கு குடியேறிப் போனவர்கள் பலர் மரித்து விடுவதால் அதை பேய்வீடு என்று அழைத்தார்கள்.

**1–7–1991** அன்று பிள்ளைகளுடன் ஜாலோத் ஊரில் கிடைத்த வீட்டில் ஜெபித்து உள்ளே சென்றோம். ஷாரோன் மரித்த வேதனை ஒருபுறம் இருந்தது. தனிமையும், பணக்கஷ்டமும் மறுபுறம். சில தினங்களுக்கு பின் நாங்கள் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது ஆண்டவர் இயேசு எங்கள் அறையில் பிரசன்னமானார். "ஷாரோனை" குறித்துக் கலங்க வேண்டாம். என்னிடத்தில் இருக்கிறாள். கோதுமை மணி இந்த நிலத்தில் விழுந்தபடியால் ஆயிரமாயிர குடும்பங்களை உங்களுக்குத் தருவேன். அற்புத அடையாளங்கள்



ஷாலோம் ஊழியம் ஆரம்பிக்கப்பட்ட பேய் பங்களா



மூலமாக என்னை பீல் மக்களுக்கு வெளிப்படுத்துவேன் என இயேசு கூறினார். அவ்வளவுதான் எங்கள் துக்கங்கள் மாறின. ஆண்டவர் சொன்னபடி வெள்ளிக்கிழமை கூட்டம் ஆரம்பித்தோம்.

முதல் வாரக் கூட்டத்தில் சாராயம் காய்ச்சுகின்ற ராம்சிங்பாய் குடும்பமும், சவ்ஜிபாய் என்ற மந்திரவாதி குடும்பமும் ஜெபிப்பதற்காக வந்தார்கள். தேவன் இவர்களுக்குள் இருந்த 21 வருட பிசாசின் கட்டுகளிருந்தும், நோய்களிருந்தும் விடுதலை கொடுத்தார். அதை தொடர்ந்து இவர்கள் கூறின சாட்சி மூலமாக, அடுத்த வாரம் 20 பேர் வந்தார்கள். குருடர்கள் பார்வையடைந்தார்கள், செவிடர்கள் கேட்டார்கள். வியாதியஸ்தர்கள் சொஸ்தமடைந்தார்கள். பிசாசு பிடியினின்றும் பாவத்தின் பிடியினின்றும் அநேகர் விடுதலை பெற்றார்கள். அதைத் தொடர்ந்து 50, 60, 100 பேர் ஒவ்வொரு வாரமும் பங்கெடுக்க ஆரம்பித்தார்கள்.



இயேசுவின் நாமத்தில் அற்புதங்கள் நடக்கின்றன

4 மாதங்கள் கழித்து சகோ. G.P.S. ராபின்சன் (இயேசு சந்திக்கிறார், சென்னை) அவர்கள் பணித்தளத்திற்கு வந்து சிறப்புக் கூட்டங்களை நடத்தினார்கள். முதல் கூட்டத்தில் சுமார் 85 பேர் பங்குபெற்றார்கள். அநேக அற்புதங்கள் நடைபெற்றன. இரவு வீட்டில் நடைபெற்றகூட்டத்தில் சுதேச ஊழியர்கள், விசுவாசிகள் குறிப்பாக என் மனைவி வஹிதாவும் பரிசுத்த ஆவியினால் அபரிதமாய் நிரப்பப்பட்டார்கள். அது மாத்திரமல்ல 1992ஆம் ஆண்டு இயேசு அழைக்கிறார் மூலமாக நடைபெற்ற வல்லமை முகாமில் குடும்பமாக பங்குபெற தேவன் உதவிச் செய்தார். சகோ. டாக்டர் DGS. தினகரன் அவர்கள் எங்களுக்காக ஜெபித்தார்கள். வருங்கால ஊழியத்தைக் குறித்ததான தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கூறி எங்களை ஆசீர்வதித்தார்கள்.

மேலும் இழந்து போன ஷாரோன் குழந்தைக்குப் பதிலாக, மற்றொரு பெண் குழந்தைக்காக பாரத்துடன் ஜெபித்தார்கள். அவர்களின் ஜெபத்தை தேவன் கேட்டு அடுத்த வருடமே ஷெக்கினா என்ற பெண் குழந்தையைக் கொடுத்து ஆசீர்வதித்தார்.



சுதேச ஊழியர்களையும் தேவன் பயன்படுத்த ஆரம்பித்தார். 14 கிராமங்களில் ஆராதனை குழுக்கள் உருவானது. முதன் முறையாக கிறிஸ்துமஸ் மேளா (1991) நடத்தினோம். இயேசு பிறப்பின் நற்செய்தியை ஆசரித்தார்கள். முதன் முறையாக 300 பேர்கள் இயேசுவைப்பற்றி அறிந்து ஏற்றுக்கொண்டு முதல் உண்மையான கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆசரித்தார்கள்.

1992 ஜுலை (1 வருடத்தில்) 7 சுதேச ஊழியர்கள் ஊழியத்திற்கென்று தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். 12 மாதங்களில் சுமார் 500 பேர் ஆண்டவரை தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். தொடர்ந்து கடந்த 18 ஆண்டுகளில் தேவன் தந்த வளர்ச்சியைக் கண்டு பிரமித்தோம். திரியேக தேவனுக்கே மகிமை செலுத்துகிறோம். 01.07.2009 அன்று 19ம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைக்கும் நம் ஷாலோம் ஊழியங்களுக்காக பாரத்தோடு ஜெபிக்க அன்பாய் கேட்கிறேன்.

## இல்லற வாழ்வின் ஆசீர்வாதம் - 08.07.1985

08.07.2009 அன்று எங்களது திருமண நாள் அந்நாளில் மறவாது எங்களுக்காக ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். இல்லற வாழ்வில் 24 வருடங்களைக் கடந்துவரவும், பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக வாழவும் தேவன் கிருபை செய்துள்ளார். மேலும் கோவை, காருண்யா கல்லூரியில் படித்து வரும் டைட்டஸ் MBA I Yr., ஷாலோம் B.Tech IIIyr பாளை, ரோஸ் மேரி பள்ளியில் +2 படிக்கும் ஜாய் ஷெக்கினா – இந்த மூன்று பிள்ளைகளை தேவன் எங்களுக்கு தந்து ஆசீர்வதித்துள்ளார். பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்க அன்பாய் கேட்கிறோம். மேலும் ஷாலோம் ஊழியங்களை ஜெபித்துத் தாங்கி வரும் உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்து வருகிறோம்.

**உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன். ஆதி. 12:3**





மேலும் சகோ. வே. தேவதாஸ் அவர்களுடன் தொடர்பு கொள்ள
**Cell : 09377445468**

**நமது தலைமுறையில் பீல் ஆதிவாசி ஜனங்கள்**
**தேவனை அறியும் பணியில்**

# 20ஆம் ஆண்டிற்கான ஷாலோம் ஊழிய வளர்ச்சி திட்டங்கள்.

- 300 புதிய சுதேச ஊழியர்களை எழுப்பி பயிற்சி கொடுத்து உருவாக்குதல்.
- 100 புதிய கிராம ஆலயங்கள் கட்டப்படுதல்
- 500 ஆதிவாசி மாணவர்களுக்கு கல்வியறிவுக்காக உதவுதல்
- 5000 வேத புத்தகங்களை 5000 விசுவாசக் குடும்பங்களுக்கு வழங்குதல்
- 300 புதிய சுதேச ஊழியர்களுக்கு சைக்கிள்கள் வழங்குதல்
- ஆவிக்குரிய பயிற்சி திட்டங்கள்.
- 10,000 மூப்பர்களுக்கு சிறப்பு முகாம்கள்
- புதிய சுதேச ஊழியர்களுக்காக 1 மாத பயிற்சி (40x12)
- மூத்த ஊழியர்களுக்கான B.Th., மற்றும் 1 வருட வேதபாட திட்டங்கள்.
- 3000 வாலிபர்களுக்கான முகாம்கள் நடத்துதல்
- 20,000 பிள்ளைகளுக்கு VBS பயிற்சி மற்றும் Sunday School பயிற்சிகள்
- பெண்கள் எழுப்புதல் முகாம்கள்
- மூத்த தலைவர்களுக்கான (ஊழியர்கள்) சிறப்பு பயிற்சி முகாம்கள்.
- நற்செய்தி கூட்டங்கள், எழுப்புதல் கூட்டங்கள் நடத்துதல்
- சுதேச ஊழியர்கள் குடும்ப அக்கினி முகாம்கள்.
- ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் பீல் மொழியில் ஆடியோ & வீடியோ வெளியிடுதல்.

இதன் மூலமாக 1000 கிராமங்களில் 1000 ஸ்திர ஸ்தல சபைகளை உருவாக்கி குறைந்தது 3 லட்சம் ஆத்துமாக்களை கிறிஸ்துவண்டை வழிநடத்த வேண்டும் என்ற தரிசனத்துடன் செயல்படுகிறோம். வாருங்கள் எழுந்து கட்டுவோம்! ஜெபிப்போம் செயல்படுவோம்!



# ஆதிவாசி மாணவர் கல்விக்கான நிதி உதவி

தேவ கிருபையினால் சுமார் 80 இலட்சத்திற்கும் அதிகமான பீல் ஆதிவாசிகள் மத்தியில் குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மாநிலங்களில் கடந்த 18 வருடங்களில் சுமார் 600 கிராமங்களில் சுவிஷேசம் அறிவித்து சபைகளை ஸ்தாபிக்க தேவன் கிருபை செய்துள்ளார். அந்தகாரத்திலும், குடிப்பழக்கத்திலும் பாவபிடியிலும் வாழ்ந்து கொண்டிருந்த சுமார் 20,000 குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார்கள். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!

பொதுவாக நாம் அறிந்தபடி பீல் ஆதிவாசிகள் தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பமாட்டார்கள். அங்கு பள்ளிக்கூட வசதிகளும் குறைவு. தொண்டு செய்யும் மனப்பான்மையுடன் பணி செய்யும் ஆசிரியர்களும் கிடையாது. பள்ளிக்கூடங்கள் செல்வதற்கு பல மைல்கள் நடந்து செல்ல வேண்டும். பெரும்பாலான கிராமங்களில் மின்சார வசதி இல்லாதபடியால் இரவு நேரங்களில் படிக்க வாய்ப்பு கிடையாது. ஆதிவாசி பிள்ளைகளை படிக்க உற்சாகப்படுத்தும் பெற்றோர்களும் படித்தவர்கள் கிடையாது. பொதுவாக கிராம சூழ்நிலைகள் இரவு நேரங்களில் குடிகாரர்களும், திருடர்களுமாய் சுற்றிவருவதால் படிப்பதற்கான சூழ்நிலைகள் கிடையாது. அப்படியே சற்று படிக்க வாஞ்சையாக இருந்தாலும் 5–வது வகுப்பிற்கு மேல் படிப்பது கடினம். கிராம ஆரம்ப பள்ளிகளில் ஒழுங்காக எழுத படிக்க கூட தெரியாத சூழ்நிலைகள் உண்டு. பெரும்பாலான கிராம மக்கள் தங்கள் பிள்ளைகளை நகரங்களில் தாங்கள் கூ– வேலை செய்யும்போது தங்கள் சிறுபிள்ளையை பாதுகாத்துக் கொள்ள படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு செல்வார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் 8ம் வகுப்பு வரை படித்து பாஸ் பண்ணினவர்கள் மிகக் குறைவாய் இருப்பார்கள். அதிலும் மேலாக 10–ம் வகுப்பு, 12ம் வகுப்பு படித்து பாஸ் பண்ணினவர்களை கைவிரல் விட்டு எண்ணிவிடலாம். ஒரு கிராமத்தில் கல்லூரி படிக்கும் மாணவர்களை பார்ப்பது மிக மிக அரிது. இவைகள் எல்லாவற்றிலும் பார்க்கும்போது ஒரு ஆதிவாசி மாணவன் நன்றாக படிக்கும் போது அண்டை வீட்டார் அல்லது உறவினர் அவனை படிக்கவிடாதபடிக்கு பொறாமையுடன் அசுத்த ஆவிகளை ஏவிவிடுவார்கள். மேலும் 8–ம் வகுப்புக்கு மேல் படிக்கவேண்டுமென்றால் பிள்ளைகளுக்கு உணவு வசதி, நோட்டு, புத்தகங்கள் மற்றும் படிப்பதற்கான செலவீனங்களை ஏற்றுக் கொள்ள பொருளாதார வசதி குறைவு. மேலும் அநேகர் வறுமைக்கோட்டிற்கு கீழ் இருப்பதினால் தங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க மாட்டார்கள். இட ஒதுக்கீடு இவர்களுக்கு இருந்தாலும் அதை பெற்றுக் கொள்ளக்கூடிய கல்வித் தகுதி அவர்களுக்கு இல்லாதபடியினால் ஒவ்வொரு துறையிலும் ஆதிவாசி மாணவர்கள் முன்னேறி வர இயலாமல் தடை ஏற்படுகிறது.

இப்பொழுது இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு பாவம், சாபம், பிசாசு இவைகளி–ருந்து விடுதலைபெற்ற விசுவாசக் குடும்பங்கள் தங்கள் பிள்ளைகள் தங்களைப் போல் வாழக்கூடாது, தங்கள் பிள்ளைகள் படித்து சாட்சியுடன் வாழ வேண்டும் என்று வாஞ்சையுடன் எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே நாங்கள் இந்த தேவைகளை கண்டறிந்தவர்களாய் பாரத்துடன் ஒவ்வொரு வருடமும் கல்வியறிவு பணிக்காக நம்மால் முடிந்த உதவிகளை செய்து வருகிறோம்.

கடந்த இரு நூற்றாண்டுகளில் மேல்நாட்டு மிஷனெரிமார்கள் நமக்கு சுவிசேஷ ஒளியைத் தந்து ஆண்டவரண்டை நடத்தி அழகுமிகு ஆலயங்களைக் கட்டிக் கொடுத்தார்கள். இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்தியாவில் பல நகரங்களில் அன்று மிஷனெரிமார்களால் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவ கல்வி நிலையங்கள் மூலமாக மூன்று நான்கு தலை முறையாக நாம் கல்வியறிவைப் பெற்று வருகிறோம். கிறிஸ்தவர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு ஜாதி சமயத்தினரும் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசீர்வாதமாக இன்றும் அமைந்து வருகிறது. இது நாம் மறுக்க முடியாத உண்மை. இன்றைக்கு கிறிஸ்துவின் அன்பையும், கல்வியறிவையும் பெற்ற நாம் கல்வியறிவில்லாதவர்களுடைய கண்களை திறக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். தேவன் இந்த பீல் மக்களை தெரிந்தெடுத்து அற்புத அடையாளங்களோடு சுதேச ஊழியர்களை தெரிந்தெடுத்து கிராமங்கள் தோறும் சபைகளை தேவன் உருவாக்கி வருகிறார்.

RtúTôÕ Sm êXm Lp®V±Ü ùTtß YÚm Àp B§Yô£ UôQYoL°u ®TWm.

1. அனைத்து சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் – 560
2. ஐ.பி. மிஷன் விடுதி ஜாலோத், குஜராத் – 90
3. ஷாலோம் விடுதி ஜெசவாடா, குஜராத் – 30
4. ஷாலோம் விடுதி அந்தர்வே–யா, மத்தியபிரதேசம் – 25
5. ஷாலோம் அனாதை பிள்ளைகள் ஆசிரமம் கோய்க்கா, இராஜஸ்தான் – 25
6. ஷாலோம் மிஷன் பள்ளி & விடுதி, இராஜஸ்தான் – 220

மொத்தம் – 950

ஆகவே கீழ்காணும் திட்டங்களை ஆவியானவருடைய ஒத்தாசையோடு நிறைவேற்ற பிரயாசப்படுகிறோம்.

✞ தாகோத் (குஜராத்), பான்ஸ்வாடா (இராஜஸ்தான்), ஜாபுவா (மத்தியபிரதேசம்) ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 2010–ஆம் ஆண்டுக்குள் 10 பள்ளிக்கூடங்கள் கட்டி எழுப்பவேண்டும்.

✞ 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களை பராமரிக்கக்கூடிய 100 ஆதிவாசி மாணவர்கள் விடுதிகளை மூன்று மாநிலங்களிலும் எழுப்ப வேண்டும்.

✞ 12–ம் வகுப்பு முடித்துவிட்டு உயர்கல்வி மற்றும் தொழில் கல்வி படிக்க முன்வரும் விசுவாசி பிள்ளைகளை முழுமையாக நிதி உதவி கொடுத்து, ஆலோசனைகள் மற்றும் பயிற்சி கொடுத்து தாங்க வேண்டும்.

✞ இதன் மூலமாக 10 வருடங்களில் இந்த மூன்று ஆதிவாசிகள் நிறைந்த இந்த மாவட்டங்களிலும் குறைந்தது 1000 ஆதிவாசி இளைஞர்கள் தங்கள் சமுதாயத்தில் சிறந்த தலைவர்களாக, அதிகாரிகளாக தொண்டு செய்து தங்கள் மாவட்டங்களை முன்னேற்ற வழி செய்பவர்களாக மாறுவார்கள் என்பது எங்கள் பாரமும் தரிசனமுமாகும்.

✞ பீல் ஆதிவாசி சிறுவர்கள் கல்வியறிவு பெற்று நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

✞ ஒரு பீல் ஆதிவாசி மாணவரை மாதந்தோறும் ரூ. 400/– கொடுத்து ஜெபித்து தாங்கக்கூடிய ஆதரவாளர்களை எழுப்ப வேண்டும்.

## *2009 கல்வியாண்டின் தேவைகள்*

இந்த 2009ம் ஆண்டு ஜுன் மாதத்தில் மேற்கண்ட மாணவர்களின் பள்ளிக்கான கட்டணம் (School Fees, Dress, Note Books) வாங்குவதற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 500/– வீதம் 950 மாணவர்களுக்கு **ரூ. 4,75,000/–** தேவைப்படுகிறது. இதுவரை ரூ. 1,20,000/– கிடைக்கப் பெற்றுள்ளோம். உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது சபை, ஜெபக்குழு மூலமாக ஒரு சில மாணவர்களுக்காவது கல்வி உதவி செய்ய முன் வாருங்கள்.

**“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்.”** (மத்தேயு 25:40) இந்த வசனத்தின்படி பீல் ஆதிவாசி மாணவர்களுக்காக நீங்கள் தியாகத்தோடு கொடுக்கும் நிதி உதவிகளை ஆண்டவர் ஏற்றுக் கொண்டு **“உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்”** (ஏசாயா 53:13) என்ற வசனத்தின்படி கர்த்தர் உங்கள் சந்ததிகளை ஆசீர்வதிப்பாராக. காணிக்கை அனுப்பும்போது உங்கள் பிள்ளைகளுக்கான ஜெபக்குறிப்புகளை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். நாங்களும், ஊழியர்களும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## ஊழியத்தின் தேவைகளும் உங்கள் பங்கும்

- மாதந்தோறும் ரூ.2000/-கொடுத்து பீல் சுதேச ஊழியரை ஜெபித்து தாங்க முன் வரலாம்.
- மாதம் ரூ.500/- கொடுத்து ஊழிய சார்பு தேவைகள் சந்திக்கும்படி ஒரு கிராமத்தில் நடைபெறும் ஊழியத்தை தாங்கலாம்.
- மாதம் ரூ.400/- கொடுத்து ஆதிவாசி சிறுவர் ஒருவரை பராமரிக்க முன் வரலாம். (ஒரு ஆண்டிற்கு ரூ. 4,800/–)
- ரூ.60,000/- கொடுத்து ஒரு கிராம ஆலயத்தைக் கட்டிக் கொடுக்க முன் வரலாம்.
- மூத்த சுதேச ஊழியர்களுக்கு ரூ.35,000/-மதிப்பில் இரு சக்கர வாகனம் **(Two Wheeler)**  வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பீல் சுதேச ஊழியர்களுக்கு ரூ.2,500/-மதிப்பில் மிதிவண்டி  **(Cycle)** வாங்கிக் கொடுக்க முன் வரலாம்.
- பணித்தளத்தில் நடைபெறும் கூட்டங்கள், மூப்பர்கள் முகாம், சுதேச ஊழியர்கள் பயிற்சி ஆகியவற்றிற்கான செலவினைப் பொறுப்பெடுத்துக் கொள்ளலாம்.
- ரூ.80/-வீதம் குஜராத்தி மற்றும் ஹிந்தி மொழிகளில் வேதாகமங்கள் பீல் விசுவாசிகள் வாங்க உதவ முன்வரலாம். (5550 வேதப்புத்தகங்கள் தேவை)
- அனுதினமும் பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பிற்காக மறவாமல் ஜெபியுங்கள்.
- மாதந்தோறும் உங்களால் முடிந்த காணிக்கையை அனுப்புங்கள்.
- மற்றவர்களுக்கும் ஊழியத்தை அறிமுகப்படுத்துங்கள்.

இந்தப் பத்திரிக்கையை நீங்கள் இணையதளத்தின் மூலமாகவும் வாசித்து தேவனை மகிமைப்படுத்தலாம். மட்டுமல்லாமல் உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்கு இமெயில் மூலமாகவும் அறிமுகப்படுத்த அன்பாய் கேட்கிறோம்.

**http://www.shalommission.in/magazineview.asp**

## குழந்தை ஆதரவாளர்கள் கவனத்திற்கு

தேவன் நமக்கு இதுவரையில் சுமார் 25 ஆயிரம் ஆதிவாசி விசுவாச சிறுபிள்ளைகளை தந்துள்ளார். அவர்களில் 400 பிள்ளைகளை மட்டும் தெரிந்தெடுத்து ஷாலோம் விடுதியிலும் மற்றப் பள்ளியிலும் வைத்து படிக்க வைத்து கொண்டிருக்கிறோம். அதிலுள்ள குழந்தையைத்தான் நீங்கள் மாதந்தோறும் காணிக்கை கொடுத்து தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இந்த ஜூன் மாதத்தில் இவர்கள் தேர்ச்சி பெற்று அடுத்த வகுப்பிற்கு செல்ல இருக்கிறார்கள். ஆகவே இந்த மாதம் இவர்களுக்கு பள்ளிக் கட்டணம், புத்தகம், சீருடை ஆகியவற்றிற்கு நாம் உதவி செய்யவேண்டும். ஆகவே நீங்கள் தாங்கி வருகிற குழந்தைகளுக்கு ஜூன் மாத காணிக்கையுடன் ரூபாய் 500/– சேர்த்து அனுப்பி உதவ மிக அன்புடன் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## சுதேச ஊழியர்கள் ஆதரவாளர்கள் கவனத்திற்கு

நம் அனைத்து பீல் சுதேச ஊழியர்களும் மிகவும் சிறப்பாக ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக தேவன் பலத்த அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து வருகிறார். நம் பீல் சுதேச ஊழியர்களில் பல ஊழியர்கள் தங்களுடைய வேலையையும், தொழிலையும் விட்டுவிட்டு ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வருகிறார்கள். இந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுத்திருக்கிறார். இவர்கள் பள்ளியில் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் படிப்பில் சிறந்து விளங்குகின்றனர். ஊழியர்களின் பிள்ளைகள் அனைவருமே இந்த ஆண்டு தேர்ச்சி பெற்றுள்ளார்கள்.

இந்த ஜூன் மாதத்தில் ஊழியர்களின் பிள்ளைகள் அடுத்த புதிய கல்வியாண்டிற்குள் நுழையும்போது அவர்கள் படிப்பிற்காக நாம் தான் உதவி செய்ய வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு ஊழியர்கள் வீட்டிலும் சுமார் மூன்று அல்லது நான்கு பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். ஆகையால் மிஷனெரிகளைத் தாங்கும் ஆதரவாளர்கள் தங்களுடைய மிஷனெரி பிள்ளைகளின் படிப்பிற்காக ரூ. 1000/– அல்லது அதற்கு மேல் ஜூன் மாத ஆதரவு தொகையுடன் அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம். நீங்கள் செய்கின்ற இந்த உதவி மூலமாக ஆதிவாசி சிறு பிள்ளைகள், நலம் பெற்று சமுதாயத்தில் நல்ல நிலைமைக்கு வருவார்கள்.

# காணிக்கை அனுப்புவதற்கான வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.
- வெளிநாட்டில் வசிப்பவர்கள் "V. DEVADOSS" (or) Sharing Love Mission என்ற பெயருக்கு D.D., (or) Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799

# சாமுவேல் சுவேமேர்

மிஷனெரி முன்னோடிகள்



ஹாலந்துக்கு அருகில், மிக்ஸிகன் என்ற இடத்தில், சீர்திருத்த சபையின் போதகரான இவரது தந்தைக்கு 13வது மகனாக 1867ஆம் ஆண்டு **சாமுவேல் சுவேமேர்** பிறந்தார். கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்ட இவர் மிஷனெரி பணியில் அதிக ஆர்வம் காட்டி வந்தார். இவரது சகோதரர்களில் 4 பேர் தேவபணி செய்து வந்தனர். இவரது சகோதரி **நெல்– சுவேமேர்** என்பவரும் 40 வருடங்கள் சீனா தேசத்தில் மிஷனெரியாக உழைத்தவர். **ஹோப்** கல்லூரியில் படிக்கும்போது, **ராபர் வில்டர்** என்ற மஷனெரியின் சவாலான செய்தியினால் தொடப்பட்டு, மற்ற 5 நண்பர்களுடன் தன்னையும் மிஷனெரி பணிக்காக அர்ப்பணித்தார்.

கல்லூரி படிப்பை முடித்து, வேதத்தையும், தருத்துவத்தையும் முறையாக கற்றுக்கொண்டார். அரேபிய உலகிற்கு மிஷனெரியாக செல்ல தீர்மானித்து ஜெபித்தபோது, நண்பர் **ஜேம்ஸ் கேன்டினும்** இணைந்து கொண்டார். இவர்களை அனுப்பவும், தாங்கவும் எவரும் முன் வரவில்லை. **அமெரிக்கன் அரபியன் மிஷன்** என்ற இயக்கத்தை ஆரம்பித்தனர். இஸ்லாமிய நாடுகளுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பது நடைமுறையில் சாத்யமல்ல என்று இவர்களை அநேகர் சோர்வடையச் செய்தாலும், தாங்கள் பெற்றுக்கொண்ட தரிசனத்தை இழந்து போகாமல் செயல்பட்டு வந்தார்கள். **சாமுவேல் சுவேமேர்** ஒகியோவின் மேற்கு பகுதியிலும், இவரது நண்பரான **ஜேம்ஸ் கேன்டின்** ஒகியோவின் கிழக்குப் பகுதியிலும் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணம் செய்து, அங்குள்ள திருச்சபைகளை சந்தித்து, இந்த மிஷனெரி பாரத்தையும் ஊழியத்தின் அவசியத்தையும் பகிர்ந்து கொண்டார்கள். அதன் பயனாக இவர்களுடைய பயணத்திற்கு தேவையான பொருளுதவி கிடைத்தது. 1889 ஆம் ஆண்டு ஜேம்ஸ் கேன்டினும், 1890ஆம் ஆண்டு சாமுவேலும் அரேபியாவுக்கு சென்று பணியை செய்து வந்தனர். இவர்களது அர்ப்பணிப்பையும் இலட்சியத்தையும் கண்ட திருச்சபை தலைவர்களும், திருச்சபை மக்களும் 1894ஆம் ஆண்டு இவர்களை ஆதரிக்க முன்வந்தனர்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இந்த இயக்கத்தின் மிஷனெரி **ஏமி வில்கிஸ்** என்பவரை மணந்தார். 1897ல் பாரசீக வளைகுடா பகுதியிலுள்ள பகரின் என்ற தீவில் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வந்தார். தெருக்களில் சுவிசேஷப் பிரதிகளை விநியோகித்தல், பொதுக்கூட்டத்தில் நற்செய்தி அறிவித்தல், வீடுகளை சந்தித்து தனி நபர்களை கிறிஸ்துவிடம் வழி நடத்துதல், போன்ற முறைகளில் ஊழியங்களை மேற்கொண்டு வந்தார். கடுமையான எதிர்ப்புகளின் மத்தியில் பல கஷ்டங்களையும், வசதி குறைவுகளையும் சந்தித்தார். 1904ல் ஜுலை மாதத்தில் தங்களது இரு மகள்களையும் 8 நாட்களில் (4வயது, 7வயது) மரிக்க கொடுத்தனர் என்றாலும் ஊழியத்தில் உறுதியாக நின்றார்கள். நான்கு இடங்களில் பணித்தளம் அமைத்தார். வெகு சிலரே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டாலும், விசுவாசத்தில் உறுதியாக செயல்பட்டனர்.

1910 ஆம் ஆண்டு பகரின் வந்து அங்கு தனது ஊழியத்தைத் தொடர்ந்தார். பிள்ளைகளின் படிப்பினிமித்தமாக ஏமியையும் பிள்ளைகளையும் அமெரிக்காவில் விட்டுவிட்டு, தனியாக ஊழியத்தை செய்தார். 1912ஆம் ஆண்டு அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்கும் தலைமையேற்று கெய்ரோ என்ற இடத்தை மையமாக வைத்து பணிசெய்து வந்தார். இதன் மூலம் கெய்ரோ பல்கலைகழக மாணவர்கள் மத்தியில் ஊழியம் செய்ய நல்ல வாய்ப்பு கிடைத்தது. எல் அஸ்கர் என்ற பல்கலைகழகத்தில் 2000 மாணவர்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். பல எதிர்ப்புகள் வந்தாலும் சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். **ஒரு முறை ஒரு விரிவுரையாளரிடம் கொடுத்த கைப்பிரதியினை அவர் கிழித்தெறிந்தார். இதனை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மாணவன் கோபப்படும் அளவிற்கு அதில் என்ன இருக்கிறது என்று கிழிந்த அந்த பிரதியை எடுத்து ஒட்ட வைத்து அதை வாசித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டான்.** மாணவர் மத்தியில் ஊழியம் செய்ததால் கெய்ரோவை விட்டே வெளியேற வேண்டும் என நிர்ப்பந்திக்கப்பட்டார்.

17 வருடங்கள் கெய்ரோவில் தங்கி ஊழியம் செய்து உலகின் பல நாடுகளுக்கு சென்று திருச்சபைகளை சந்தித்து இஸ்லாமியர்கள் மத்தியில் நடைபெறும் ஊழியங்களை பகிர்ந்து கொண்டு பலரை எழுப்பினார். இஸ்லாமிய மக்களுடன் சமமாக உட்கார்ந்து கலந்துரையாடி, அவர்களுடைய மதக்கருத்துக்களையும் கேட்டு, ஒரே இரட்சகர் இயேசுவே என கூறி வந்தார். **வறண்ட விளைநிலம் என்று எண்ணப்பட்ட இஸ்லாமியர்கள் மத்தியிலும் ஊழியம் செய்து, ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தினார் சாமுவேல் சுவேமேர்.**

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



மாணவனின் பெயர் : **ஷாரோன்**

தகப்பனார் பெயர் : பாவ்சிங் கட்டாரா

தாயார் பெயர் : விலாஸ் கட்டாரா

பிறந்த நாள் : 03.03.2000

படிக்கும் வகுப்பு : V

சொந்த ஊரின் பெயர் : குணசியா

தாலூகா : ஜாலோத்

மாவட்டம் : தாகோத்

மாநிலம் : குஜராத்

தங்கி படிக்கும் விடுதி : ஷாலோம் மாணவர் விடுதி, ஜெசவாடா

**மாணவியின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–**

ஷாரோனின் பெற்றோர்கள் இயேசுவை அறியாதவர்கள். இவர்கள் விக்கிரகங்களை வணங்கி வந்தார்கள். இவர்கள் குடும்பத்தில் சமாதானம் இல்லை. ஷாரோனின் தகப்பனாருடைய மாமா கிறிஸ்தவராக இருந்தார். அவர் இவர்களுக்கு இயேசுகிறிஸ்துவைப் பற்றிக் கூறினார். இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்து, ஆலயத்திற்கு செல்ல ஆரம்பித்தார்கள்.

இதன்பின் தேவன் இவர்கள் குடும்பத்தில் சமாதானத்தைக் கட்டளையிட்டார். பின்பு இவள் தகப்பனார் ஊழிய அழைப்புப் பெற்று ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:-** இவள் ஜெபம் பண்ணுவதிலும், வேதம் வாசிப்பதிலும், பாடல் பாடுவதிலும் மிகவும் வாஞ்சை கொண்டவள்.

**ஜெபியுங்கள்:-** நல்ல முறையில் படிக்க தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும், நல்ல ஆரோக்கியத்திற்காகவும், குடும்பத்தின் ஆசீர்வாதங்களுக்காகவும், பெற்றோர் செய்கின்ற ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.


**இச்சிறுமியைத் தாங்குபவர் :** **Mr. Soundar Raj,** Vikramasingapuram

(இந்த சிறுமியைப் போல் இன்னும் 260 பிள்ளைகளுக்கு மாதம் ரூ. 400/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் தேவை.)

# நினைவுப்படுத்துகிறோம்......


அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டிய–ல் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து M.O, D.D, Cheque மூலமாக Sharing Love Mission என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டிய–ன் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதைத் திறக்க சாவி (Key) வேண்டுமானால் 9345675468 இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை (Key) அனுப்பி வைக்கிறோம்.



---

# சந்தாவைப் பற்றி



அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள பீல் ஆதிவாசிகள் மத்தியில் நடைபெறும் மிஷனெரி பணிகளுக்காக காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்களுக்கு ஊழியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஊழியத்திற்காக பாரத்துடன் ஜெபிப்பதற்காகவும் இந்த மலரை அனுப்புகிறோம்.

அன்பான ஆதரவாளர்களே, நீங்கள் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரைப் பெற்று கொண்டிருப்பீர்களானால் இந்த வருடத்திற்கான (2009) பத்திரிக்கைச் சந்தாவை செலுத்தி பத்திரிக்கை ஊழியத்தை தாங்கவும், பத்திரிக்கை ஊழியம் வளர்ச்சி அடையவும் ஜெபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

**ஆண்டு சந்தா : ரூ.60/–  ஆயுள் சந்தா : ரூ.600/–**

லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் 21.06.2009 அன்று நடைபெற்ற 2–வது ஐ.சி.சி. 20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் இலங்கையை வென்று உலக சாம்பியன் பட்டத்தை வென்றது. உலகம் முழுவதும் ஆவலுடன் எதிர்பார்த்த இந்த போட்டியைக் காண கிரிக்கெட் ரசிகர்களால் ஸ்டேடியம் நிரம்பி வழிந்தது.

இராஜஸ்தான் மாநிலம், டவுசா மாவட்டம் மொராடி கிராமத்தில் ஆழ்குழாய் கிணற்றில் விழுந்த அஞ்சு என்ற 4 வயது சிறுமி 19 மணி நேர போராட்டத்திற்குப் பின் உயிருடன் மீட்கப்பட்டாள். அந்தச் சிறுமி 200 அடி ஆழமுள்ள ஆழ்குழாய் கிணற்றின் அருகே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது எதிர்பாராதவிதமாக தவறி விழுந்த அவள் 48 அடி ஆழ பகுதியில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தாள். தகவல் அறிந்ததும் போலீசார், தீயணைப்பு வீரர்கள், அவசர மீட்பு பணி குழுவினர் மற்றும் மருத்துவ குழுவினர் போராடி குழந்தையை உயிருடன் மீட்டனர்.

உலக அளவில் பட்டினியாக கிடப்பவர்களின் எண்ணிக்கை 100 கோடியைத் தொட்டது. இது உலக அமைதிக்கு ஆபத்தானது என்று ஐ.நா சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். வறட்சி, நிலையற்ற அரசியல், உணவுப் பொருட்களின் விலை உயர்வு, பொருளாதார மந்தநிலை ஆகியவை காரணமாக பட்டினி கிடப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து விட்டது. பட்டினி கிடப்பது என்பதற்கு அவர்கள் நாள் ஒன்றுக்கு 1800 கலோரியை விட குறைவாக உணவு உண்கிறார்கள் என்று அர்த்தம்.

அரபு நாடுகளில் ஒன்றான குவைத் நாட்டின் மொத்த மக்கள் தொகை 35 லட்சம் ஆகும். அவர்களில் 5 லட்சத்து 80 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் இருந்து அங்கு குடியேறி வேலை செய்பவர்கள் ஆவார்கள். இந்தத் தொழிலாளர்களில் கணிசமானவர்களில் அங்கு அலுவலகமோ, வர்த்தக நடவடிக்கைகளோ இல்லாத தனியார் நிறுவனங்கள் அங்கு வேலை செய்ய அனுமதி கடிதம் கொடுத்து உள்ளன. இப்படி உத்திரவாதம் இல்லாம் வேலை பார்க்கும் வெளிநாட்டு தொழிலாளர்களில் ஒரு லட்சம் பேரை அவர்களின் தாய்நாட்டிற்கு திரும்ப அனுப்புவது என்று அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. அவர்களில் ஆயிரக்கணக்கான இந்தியர்களும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி: தினத்தந்தி (22.06.09)


## எங்களுடன் தொடர்பு கொள்ள

தலைமை அலுவலகம்

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

Bro. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

email : info@shalommission.in, Website : www.shalommission.in

# ஹரேந்திரகட் கிராம ஆலயம்
## (இராஜஸ்தான்)



இராஜஸ்தான் மாநிலத்தில் பான்ஸ்வாடா மாவட்டத்தில் ஹரேந்திரகட் என்ற கிராமம் அமைந்துள்ளது. பிரதாப்சிங் பாரியா என்ற இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோதரர் இயேசுவைப் பற்றி ஒருமுறைகூட கேள்விப்படாதவராக இருந்தார். இவருடைய வாழ்க்கை மிகவும் அந்தகாரத்தில் இருந்தது. சாராயம் காய்ச்சுதல், சண்டை போடுதல் போன்றபாவங்களுக்கு அடிமைப்பட்டிருந்தார். இதனால் இவர் வியாதியினால் அதிகமாக பாதிக்கப்பட்டு வேதனைப்பட்டார். மந்திரவாதியைத் தெய்வமாக நம்பி ஆடு மற்றும் கோழிகளை வெட்டி மந்திர கிரியைகளைச் செய்தும் வியாதியி—ருந்து சுகம் கிடைக்கவில்லை. பின்பு மருத்துவமனைக்குச் சென்றார் அங்கும் சுகம் கிடைக்கவில்லை. கடைசியாக குண்டா கிராமத்தைச் சேர்ந்த பாவ்ஜிபாய் என்ற ஊழியர் நடத்தும் ஊழியத்தைக் குறித்து கேள்விப்பட்டு அவரிடம் சென்று இயேசுவை அறிந்து கொண்டார். பின்பு ஊழியர் மிகவும் பாரத்தோடு இவருக்காக ஜெபித்தபோது தேவன் இவருக்கு வியாதியிருந்து பூரணமான சுகத்தைக் கொடுத்தார். அன்றைய தினமே இயேசுவை சொந்த தெய்வமாக ஏற்றுக் கொண்டு தன்னுடைய பாவங்களை அறிக்கைச் செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டார். பின்பு சொந்தக் கிராம மக்களைக் குறித்த பாரம் அவருக்கு ஏற்படவே, தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார். தேவனுடைய கிருபையினால் 20 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டன. ஆராதனை நடத்துவதற்கு ஒரு ஆலயம் தேவை என்று ஜெபித்தபோது தேவன் இவருடைய உள்ளத்தில் பேசவே தன்னுடைய நிலத்தை காணிக்கையாகக் கொடுத்தார். அந்த நிலத்தில் தேவ நாமம் மகிமைப்படும்படியாக ஒரு கிராம ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.

இந்த கிராம ஆலயம் **Mrs. Ruby Winston** - Tuticorin. அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Postal at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

## இராஜஸ்தான் மாநிலத்தில் CBN ஸ்தாபனத்தின் மூலம் போடப்பட்ட 26 ஆழ்குழாய் கிணறுகளில் ஒருசில


மகிழ்ச்சி வெள்ளத்தில் அம்ளிபாடா கிராம சிறுவர்கள்


புதிய குழாயில் தண்ணீர் தந்த தேவனுக்கு நன்றி செலுத்தும் பீல் ஜனங்கள்


சூடாதா கிராமம்


அப்பாடா... தாகம் தீர்க்க தண்ணீர் கிடைத்தது


பேடாஃபாலா கிராமம்





அடிகுழாய் அமைப்பதற்கு முன்னதாக பீல் மக்கள் குடிக்க பயன்படுத்திய சிறிய கிணறுகளும், குட்டைகளும்

Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss